
# ஈழகேசரி விழா சிறப்பு மலர்






**16-07-94**

**RUTLISH SCHOOL**
**MOSTYN ROAD, WIMBLEDON**
**LONDON SW19**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாங்கிளியும் மரங்கொத்தியும் கூடு திரும்பத் தடையல்ல
நாங்க மட்டும் உலகத்திலே நாடு திரும்ப முடியல்ல

பெத்தவங்க ஊரினிலே ஏங்கிறாங்க பாசத்திலே
எத்தனை நாள் காத்திருப்போம் அடுத்தவன் தேசத்திலே

ஈழகேசரியை வாழ்த்துகின்றோம்!

# RAJA & CO

## SOLICITORS

**Administrators of Oaths**

**295 Balham High Road**
**Tooting Bec**
**London SW17 7BA**

**Tel: 081 682 2585 Fax: 081 682 2575**

விழாக்காண வருகைதந்த வாசகர்களுக்கும்,
விழாச்சிறக்க, வாழ்த்தி நின்று விளம்பரம் தந்தோர்க்கும்
விழாப் பொலிய ஒளிசேர்த்த முத்தமிழ்க் கலைஞர்கட்கும்,
வெளிநாட்டிலிருந்து வந்து, விருந்து தந்த கலைஞர்கட்கும்,
என்றும் எம்மை ஆதரிக்கும் அன்பர்கட்கும்,
பத்திரிகை ஆசிரியன் நன்றி சொன்னேன்.

EELAKESARI
ஈழகேசரி
A TAMIL NEWSPAPER FROM LONDON
**38 Moffat Rd. London SW17 7EZ**
**Tel: 081-767 8004**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழகேசரிக்கு எங்கள் உள்ளம் நிறைந்த வாழ்த்துக்கள்!


# London Academy of Computing & Electronics

**College Office: 58a Upper Tooting Road**
**London SW17 7PB**
**Tel: 081 767 4698**
**Fax: 081 672 8580**

**Internationally Recognised Professional Qualifications**
**Excellent Examination Pass Rate**
**Fully Equipped Computer Laboratory**
**Competitive Fees**

## TRAINING, TUTORIAL AND FULL-TIME COURSES, 1994-95

### COMPUTER PROGRAMMING AND BUSINESS COMPUTING

- ABAC and ACP Certificate and Diploma in Business Computing
- IDPM Diploma and Higher Diploma
- City & Guilds certificates in Computer Programming in Basic, Pascal and C

### WORD-PROCESSING, DESKTOP PUBLISHING AND OFFICE SOFTWARE

- Computer Literacy courses from 3 weeks to 1 year
- LACE Diplomas in Desktop Publishing and Computer Graphics
- Tutorial courses in Wordprocessing, Database, Spreadsheet, Accounting packages, DTP

### MANAGEMENT STUDIES AND ACCOUNTING

- Access courses to higher level studies
- ABE Certificate, Diploma and Advanced Diploma
- LACE Diploma in Computer-aided Management Information Systems
- Faculty of Business Administrators membership examinations
- ACEA levels I to IV

### ENGLISH FOR FOREIGN STUDENTS

- Cambridge Preliminary English Test
- Cambridge First Certificate in English

Full time FE and HE courses in Computing, Management Studies and Accounting for UK and overseas students at competitive rates. Member of the National Computing Centre, recognised by ABAC (Association of Business and Administrative Computing) ACP (Association of Computer Professionals) IDPM (Institute of Data Processing Management) ABE (Association of Business Executives) ACEA (Association of Cost and Executive Accountants) IMS (Institute of Management Specialists) City & Guilds, etc. Recognised as a bona fide college for overseas students requiring visas in order to study. Full student support and advisory service for overseas students. Student Union affiliated to the National Union of Students. One of the best value-for-money colleges in London.

**For prospectus and course details, contact the Registrar, Mr.S.L.Airey, at:**
58a, Upper Tooting Road, London SW17 7PB, Tel: 081 767 4698


கலைஞர்கள், எழுத்தாளர்களை வாழும்போதே கௌரவிக்கப் பழகுவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழகேசரிக்கு எங்கள் நல் வாழ்த்துக்கள்!

**பண்டிகையா! திருமணமா! நல்ல நாளா! என்ன கோலம்! என்னென்ன ஜாலம்!**

**இங்கு வந்தால் கல்யாண மேளம்தான்!** (முகூர்த்தப் பட்டுப் புடவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்)

**லண்டனில் ஒரே ஒரு ஜவுளி மாளிகை கீதாவுக்கு இன்றே விஜயம் செய்யுங்கள்**




**231, UPPER TOOTING ROAD, LONDON SW17**

**(Nearest Tube: Tooting Broadway)**

**EXCLUSIVE & ELEGANT**

**TEL: 081 - 672 0208**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# என் இனிய தமிழ் நெஞ்சங்களே!
# நெஞ்சம் நிறைந்த வணக்கங்கள்.

**ஈ.கே.ராஜகோபால்(ஆசிரியர் ஈழகேசரி)**

'ஈழகேசரி' பத்திரிகை மூலம் உங்களோடு உரையாடும் நான், இன்று இந்த விழாவில் நேரடியாக உங்கள் உணர்வுகளுடன் உரிமையோடு உறவாடி மகிழக் கிடைத்த இச்சந்தர்ப்பத்தைப் பெருமையாகவே கருதுகிறேன்.

பேசும் மொழிக்கும், பிறந்த மண்ணுக்கும் பெருமை சேர்த்து, மண்ணை நேசிக்கும் மகத்தான லட்சியத்தோடு, ஈழத்தமிழர்களின் இதயநாதமாக வெளிவரும் உங்கள் பத்திரிகையான 'ஈழகேசரி' யின் விழாவான தமிழ்க் கலைஞர் திருவிழாவுக்கு திரண்டு வந்து நீங்கள் தந்திட்ட இதயபூர்வமான ஆதரவு நெஞ்சத்தை நிறைக்கிறது.



என் வாழ்வின் நீண்ட காலப் பகுதியைத் தமிழ்ப் பத்திரிகைகளில் பணியாற்றுவதோடு கழித்து விட்ட போதிலும், எரிகின்ற எங்கள் தேசத்தில் தியாக வேள்வி ஒன்று நடந்து கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், நமது சொந்தங்களுக்குக் குரல் கொடுக்கும் ஒரு லட்சியப் பத்திரிகையொன்றை நடத்துகின்ற இந்தக் காலப் பகுதியே மனதுக்கு நிறைவைத் தருகின்றது.

உண்ண உணவில்லாமல், உடுக்க நல்ல துணியில்லாமல், இரவில் விளக்கேற்ற எண்ணையில்லாமல், நோய் மாற்ற மருந்து இல்லாமல், போக்குவரத்துக்கான வசதிகள் இல்லாமல், தாய் மண்ணில் வாடி வதங்கும் நமது உறவுகள்.......

நமது மண்ணை மீட்டெடுக்கத் தம் உயிரைத் துச்சமென மதித்து மாற்றான் முன் புறமுதுகு காட்டி, ஓடி ஒளிந்து விடுவதிலும் பார்க்க போர் முனையில் செத்து மடிவதே மேல் என்று கழுத்தில் நச்சுக் குப்பிகளுடன் தியாக வேள்வி நடத்தும் நமது இளைஞர்கள்.....

இந்த அழிவுகள், அவலங்களுக்கு மத்தியில் அந்த உரிமைக்குரல் ஒலிக்கச் செய்வதைவிட ஒரு உண்மையான ஈழத் தமிழ்ப் பத்திரிகையாளனுக்கு வேறென்ன வேலை இருக்கிறது?

பல ஆண்டுகால என் பத்திரிகைத்துறை வாழ்வில், "செய்திகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை" என்ற கோட்பாடுகளை தாரக மந்திரமாகக்கொண்டு புனிதமான இப்பணியைச் செய்து வருபவன். பத்திரிகா தர்மத்தைப் போற்றிப் பேணுபவன். வியாபாரத்துக்காக பத்திரிகைக்காரனாக மாறியவனல்ல!

உண்மைகள் இனிப்பதுமில்லை; அதேபோல் உண்மைகள் உறங்குவதுமில்லை. அதனால் அந்த உண்மைகளைப் பேசும்போது அந்த உண்மை நிகழ்வுக்குப் பொருளாக இருப்பவர்கள் ஆத்திரம் அடைகிறார்கள். உண்மையைத்தானே சொல்கிறார்கள் என்று அமைதிப்பட முடிவதில்லை.

பெற்ற தாய்க்கோ அல்லது உடன் பிறப்புகளுக்கோ இன்னொருவன் அடிப்பதையோ, சுரண்டுவதையோ நாம் பொறுத்துக்கொண்டிருக்க வேண்டுமா? அப்படி அடித்தவனையும், சுரண்டுபவனையும் கண்டித்தால் தண்டித்தால் அது தவறா?

உலகம் எல்லாம் அகதிகளாக அலைந்து அவலப்படும் ஈழத்தமிழருக்கு இரங்குவதற்குப் பதிலாக, சுதந்திரமாக வாழவைப்பதற்குப் பதிலாக அவனைச் சுரண்டுவதை அம்பலப்படுத்தினால் அது குற்றமா?

எங்கள் மக்களின் சொந்த நலன்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு ஈழகேசரி எடுக்கின்ற நடவடிக்கைகளை சில தமிழ் அன்பர்களும், லண்டன் ஊடாக அமெரிக்கா சென்ற தமிழக பத்திரிகை ஆசிரியர்களும் இந்தியாவுக்கு எதிரான செயற்பாடாகக் காட்ட முற்பட்டுள்ளார்கள். அவர்களுடைய இந்த அறிவீனத்தையிட்டு அனுதாபப்படுவதைத் தவிர வேறு என்னால் என்ன செய்ய முடியும்?

ஈழத்தமிழரின் இதய நாதமாகவும், அவர்களின் நலனுக்காகவும் இயங்குகின்ற 'ஈழகேசரி' பத்திரிகையின் ஆசிரியர் என்ற ரீதியில் என் பணியை நான் புறக்கணிக்க முடியாது.

தென்னிந்திய தமிழர் ஒவ்வொருவரும் எனது உடன் பிறப்புக்கள் என்பதை நான் என்றும் மறந்ததில்லை. சகோதரர்களுக்குள் ஏற்படுகின்ற பிரச்சினைகளின்போது என்னுடைய சொந்த நலனைப் பாதுகாப்பதற்காக நான் எடுக்கின்ற நடவடிக்கைகள் தவிர்க்க முடியாதவை. அந்த நடவடிக்கைகள் எனது சகோதரர்களைப் பாதிக்கக் கூடும். ஆனால் அவை அவர்களைப் பாதிக்க வேண்டும் என்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் அல்ல. இந்த உண்மையை உணரும்போது நான் தென்னிந்தியச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரர்களுக்கு மாறானவனல்ல என்ற உண்மை புலப்படும்.

**வா**ழும்போதே தாயக மண்ணின் கலைஞர்களை மதித்துக் கௌரவித்து உரிய இடம் அளித்து ஒவ்வொரு துறையிலும் சிறப்பான பணி செய்த சிறந்த கலைஞர்களுக்கு 'ஈழகேசரி' விருது வழங்கப்படுவது, முதல் முறையாக புலம் பெயர்ந்த நாடொன்றில் மக்கள் பத்திரிகையொன்று நடத்தும் சரித்திர நிகழ்ச்சியாகும். இதேவகையில், 'ஈழகேசரி' பவனி வரும் சகல ஐரோப்பிய நாடுகளிலும்,அங்கு வாழும் நமது கலைஞர்கள் 'ஈழகேசரி' விருது வழங்கிக் கௌரவிக்கப் படுவார்கள்.

தமிழீழ சாதனை வீரர்கள் தொடரில் எனது "வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்காவரை கப்பலோட்டிய தமிழர்கள்" என்ற முதல் நூலுக்கு லண்டனிலும், ஐரோப்பிய நாடுகளிலும், கனடாவிலும் நடந்த விழாக்களுக்கு நூற்றுக்கணக்கானவர்கள் வந்தார்கள். அப்போது நான் ஆனந்தன் கதையை 'ஆழிக்குமரன்' என்ற தலைப்பில் பத்திரிகையில் எழுதிக்கொண்டிருந்தேன். அதனால் அங்கு எல்லாம் 'ஆழக்குமரன்' புகழ் பாடப்பட்டது.

'தமிழீழ மண்ணில் பிறந்த வீரர்களின் சாதனைகளைச் சரித்திரமாகப் படைக்கிறீர்கள். அதனால் உங்கள் எழுத்துக்களை நேசிக்கிறோம்' என்று உணர்ச்சி பொங்க என்னை வாழ்த்திய நெஞ்சங்களிலிருந்து பிறந்த நாதங்களைக் கேட்டுப் புல்லரித்துப் போனேன். நான் சென்ற இடமெல்லாம் அந்த மாவீரனைப் புகழ்ந்து, அந்த வீரனின் கதையை நூலாக்க வேண்டுமென்று அன்புக்கட்டளையிட்டார்கள்.

உலக அரங்கில் தமிழன் வீரத்தை அரங்கேற்றிய உலக மகா வீரன் என்ற காவிய நாயகனுக்கு முன்னால் தலை வணங்கி, அந்த மாவீரனைப் பெற்று வீரச்சாவு கொடுத்த அன்னையார் ராஜம் விவேகானந்தன் என்ற புறநானூற்றுத் தாய்க்கு இந்த நூலைக் காணிக்கையாக்குகின்றேன்.

'தமிழன்' பத்திரிகையையும் பின் 'ஈழகேசரி'யையும் நான் ஆரம்பிக்கின்றபோது எனக்குப் பலவிதங்களிலும் உதவிய, உதவிக்கொண்டிருக்கும் இதயங்கள், வாசக நெஞ்சங்கள், விளம்பரம் தரும் உள்ளங்கள் எனக்குள் என்றென்றும் வாழ்ந்துகொண்டிருப்பார்கள்.

இறுதியாக,

புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் நமது மண்ணின் குழந்தைகள் தொடர்ந்து தமிழர்களாக வாழவைக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் நமக்கும் உண்டு என்பதை உணர்கிறோம். நமது கலை, கலாச்சாரம், பண்பாடு பாதுகாக்கப்பட தனது முழுமையான பங்களிப்பை 'ஈழகேசரி' எதிர்காலத்தில் தொடர்ந்து வழங்கும் என்று உறுதி கூறுகிறோம்.

மீண்டும் இதயபூர்வமான நன்றிகளுடன் விடை பெறுகிறேன். ■


**ஈழகேசரிக்கு நல்வாழ்த்துகள்**

உலகத்தின் எந்த இடங்கட்கும்
பொருட்களை அனுப்ப
எங்களை நாடுங்கள்.
நம்பிக்கையான சேவைக்கு
எங்களை நாடுங்கள்.

**SHIPPING AIR FREIGHT TRAVEL**
**TO COLOMBO**
**AND**
**OTHER WORLD WIDE DESTINATIONS**

**PERSONAL EFFECTS, HOUSEHOLD GOODS, VEHICLES AND MACHINERY**

**MAIN AGENT FOR AIRLANKA**

**PASSENGER TICKETS AND UNACCOMPANIED BAGGAGE**
**40 KG BAGGAGE ALLOWANCE**
**YOUR GOODS GO TO OUR BONDED WAREHOUSE IN COLOMBO**
*** COLLECTION * PACKING**
*** INSURANCE CAN BE ARRANGED**

**GLEN CARRIERS LIMITED**

14 Allied Way, off Warple Way, Acton
London W3 ORQ

**Tel: 081-740 8379,**
**081-749 0595**
**Fax: 081-740 4229**
**Telex: 929657 Glenca G.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதம விருந்தினர் இதயத்திலிருந்து...



***ராஜா தவராஜா LL.B.*** (முன்னாள் இலங்கை முடிக்குரிய வழக்கறிஞர்)

“ஏசுவார்கள்; எரிப்பார்கள்; அஞ்ச வேண்டாம். உண்மையை உண்மையாய் எழுதுங்கள்”

ஈழகேசரி வளர்ச்சியையும், நண்பன் ராஜகோபாலின் விடா முயற்சியையும் பார்க்கிறபோது யாழ் ‘ஈழநாடு’ ஆரம்பிக்கப்பட்டபோது யாழ்ப்பாணச் சித்தர் யோகர் சுவாமிகள் வழங்கிய மேற்கண்ட ஆசிச் செய்தியே என் நெஞ்சில் முட்டி மோதுகிறது.

பத்திரிகை தர்மத்தை இம்மியும் பிசகாது ஆரம்பத்திலிருந்தே கடைப்பிடித்து வரும் நண்பன் ராஜகோபாலுக்குத் தோல்வியே வராது!

‘தமிழன்’ என்ற பத்திரிகைக்கு நாமம் சூட்டி, கருவிலிருந்து உருவாக்கி, பலமான அத்திவாரமிட்டு வளர்த்த அவரது வேதனை எனக்கு நன்றாகவே தெரியும். இடையில் அந்தத் ‘தமிழன்’ தட்டிப் பறிக்கப்பட்டது துயரமான, துரோகத்தனமான நிகழ்வுதான். ஆனாலும் அவர் மீண்டும் ‘ஈழகேசரி’யை ஆரம்பித்து திறம்படச் செயலாற்றி வருகிறார்.

புதிய பத்திரிகைக்கு ‘ஈழகேசரி’ என்று பெயர் சூட்டுவதில் எனக்கும் பங்கு இருந்தது என்பதை நினைத்துப் பெருமைப்படுவதுண்டு. அவருக்கும் இப்போது பிரச்சினை கொடுக்க பங்குக்கு ஒருவருமில்லை. ஆனாலும் பல மிக்க மக்கள் சக்தி அவருக்குண்டு என்பதனை எண்ணி சந்தோஷப்படுகின்றேன்.

தமிழ் பத்திரிகைதுறையில் ராஜகோபால் தனித்துவமானவர். இலங்கையிலும் ஐரோப்பாவிலும் அவர் பெயருக்குத் தனிச் செல்வாக்கு உண்டு. ராஜகோபால் என்றால் அந்தச் சக்திமிக்க பெயர் தமிழ்ப் பத்திரிகைத்துறையில் வாழ்ந்துகொண்டே இருக்கும்!

அவர் எழுத்துக்கள் சக்தி மிக்கவை. தமிழீழத்தின் பெருமைகளையும், சாதனைகளையும், மண்ணின் மானத்தையும் காக்கும் மாபெரும் பணியைச் செய்து வரும் ராஜகோபால் ‘வல்வெட்டித்துறை அமெரிக்காவரை கப்பலோட்டிய தமிழர்கள்’ என்ற நூலை நமக்கு எல்லாம் தந்து மறைக்கப்பட்ட சரித்திரத்தை மக்கள் முன் வெளிக்கொண்டு வந்தார். இப்போது நம்மோடு வாழ்ந்து மடிந்த உலக சாதனை வீரன் ஆனந்தனின் கதையை இங்கு இன்று வெளியிட்டிருக்கிறார்.

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் என்னுடன் ஒன்றாகப் படித்த நெருங்கிய நண்பன் ஆனந்தன். அவரின் பல்கலைக்கழக வாழ்க்கை காதல், வீரம், விவேகம், கருணை, பண்பு, அன்பு ஆகியவை அடங்கியிருந்தது. குறுகிய மனித வாழ்க்கையில் ஒரு மனிதன் வாழ்ந்தான் என்பதைவிட எப்படி வாழ்ந்தான் என்பதுதான் சரித்திரத்தில் முக்கிய இடத்தைப் பெறும்.

ஆனந்தனின் பல்கலைக்கழக வாழ்க்கையில் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது, அவர் சிங்கள-தமிழ்-முஸ்லிம் நண்பர்கள் எல்லோரையும் சமமாகவே கருதினார். ஆனந்தனின் ஆருயிர் நண்பனாக ஜலீல் இருந்தார். ஜலீல் என்ற மனித மாணிக்கம் தற்போது இலங்கை வங்கி முகாமையாளராகக் கடமையாற்றுவதாகக் கேள்விப்பட்டேன். “உனது நண்பன் யார் என்று சொல் - உன்னைப்பற்றிக் கூறுகின்றேன்” என்பதற்கிணங்க ஜலீலின் நண்பன் ஆனந்தன் என்றால் ஆனந்தனைப்பற்றிக் கூறத் தேவையில்லை. ஆனந்தன் பாக்குத்தொடு கடலை நீந்தியபோது ஜலீலும் கூட இருந்தார். ஜலீல் அதைப்பற்றி எனக்கு விபரமாக வர்ணித்திருக்கிறார். ஆனந்தனுக்காக தனது உயிரையே அர்ப்பணிக்கத் ஆயத்தமாக இருந்தார் ஜலீல்.

ஆனந்தனின் கொள்கையை இலங்கையில் தமிழ்-சிங்கள-முஸ்லிம் மக்கள் பின்பற்றியிருந்தால் இன்று இனப்பிரச்சினையே தோன்றியிருக்காது என்று எண்ணுகிறேன்.

ஆனந்தன் மிகவும் திறமைசாலி. சட்டத்துறையில் முழு மனதுடன் ஈடுபட்டிருந்தால் இன்று இலங்கையில் சுப்ரீம் கோர்ட் நீதிபதியாகவோ அல்லது இராணி அப்புக்காத்தாதவோ ஆகியிருப்பார்.

ஆனந்தனின் கதையை, ‘ஆழிக்குமரன்’ என்ற தலைப்பில் ராஜகோபால் படைத்திருக்கும் இந்நூலை மிகச் சுவையாக எழுதியிருக்கிறார்.

தமிழீழத்தின் விடுதலைப் போராட்டத்தின் கதையையும், சாதனை படைத்துக்கொண்டிருக்கும் மாவீரர்களைப் பற்றியும் எழுதக்கூடிய தகுதி ராஜகோபால் ஒருவருக்குத்தான் உண்டு.

வாழ்க அவர் பணி! வாழ்க ஈழகேசரி! ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தமிழினத்தின் உரிமைக் குரலாக உலகமெல்லாம் ஒலிக்கும் 'ஈழகேசரி'க்கு எங்கள் இதயபூர்வமான வாழ்த்துக்கள்




# VARSHI'S FOOD STORE

நியூமோல்டனில் ஒரு தமிழ்க் களஞ்சியம்

மலிவு விலையில் அனைத்து இலங்கை, இந்தியப் பொருட்களுக்கும் நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கையான ஸ்தாபனம்


**OPEN 9AM TO 10PM**
**7 DAYS A WEEK**

**103 BURLINGTON ROAD**
**NEW MALDEN, SURREY KT3 4LR**

(NEAR BURLINGTON JUNIOR SCHOOL)

**TeL: 081 336 0061**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிரிப்பதற்காக எழுதுபவன் கோமாளி

*செ.சிறிக்கந்தராசா BSc. LLM*

பத்திரிகை என்பது ஒரு பலம் வாய்ந்த சாதனம். அந்தச் சாதனத்திற்கு ஒரு தருமம் உண்டு, குறிக்கோள் உண்டு, கோட்பாடு உண்டு. அந்தத் தருமத்திலிருந்து பத்திரிகை விலகக்கூடாது. செய்திகளைச் சேகரித்து மக்களுக்கு விநியோகம் செய்வதென்பது அதன் கடமைகளில் ஒன்று. செய்தி விநியோகம் மட்டுமல்ல அதன் கடமை. அதற்கு மேலும், பத்திரிகைக்குக் கடமைகள் இருக்கின்றன. கிடைக்கின்ற செய்திகளைத் தொகுத்து, அவற்றை வகுத்து, அவற்றை ஆராய்ந்து, பொய்ம்மைகளையும் புனைவுகளையும் நீக்கிச் செம்பொருள் கண்டு அப்பொருளை ஆசிரியர் தலையங்கங்கள் மூலம் மக்களுக்கு எடுத்துரைத்தல் பத்திரிகைகளின் தலையாய கடமை. ஆனால் ஐரோப்பாவில் வெளிவருகின்ற தமிழ்ப் பத்திரிகைகள் பல இந்தக் கடமையை உணர்ந்ததாகவோ, உணர்ந்தாலும் அக்கடமையைப் புரிவதாகவோ காணோம். இது ஈழத் தமிழினத்தின் சாபக்கேடு.

மற்றவர்கள் சிரிக்க வேண்டும் என்பதற்காகப் பேசுகின்றவன் கோமாளி. பேச்சினால் சமுதாய நன்மை விளைய வேண்டும் என்பதற்காகப் பேசுகின்றவன்தான் உண்மையான பேச்சாளி. எவர் மத்தியில் பேசுகின்றானோ அவர்களுக்கும், அவர்களைச் சேர்ந்தவர்களுக்கும் ஆக்கம் தரக்கூடியவாறு, அவர்களுடைய எதிர்கால வாழ்வுக்கு உதவக்கூடியவாறு எவன் பேசுகின்றானோ அவன் தான் சமூகத் தொண்டன். சிரிக்கப் பேசிச் சில்லறைகளைச் சேர்த்துக்கொண்டு தாய்நாட்டுக்குத் திரும்பி விடும் நோக்குடன் வணிகப் பேச்சுப் பேசுகின்ற பேச்சு வியாபாரிகளை நாம் அறிவோம். அத்தகைய கோமாளிப் பேச்சாளர்களைப்போல வியாபாரம் நடத்துகின்ற பத்திரிகைகள் பல சஞ்சாரம் செய்கின்ற ஐரோப்பாவில், ஈழத்தமிழரின் முன்னேற்றத்தையும் எதிர்காலத்தையும் அவர்களது தற்போதைய உடனடித் தேவைகளையும் தனது குறிக்கோளாக வைத்து இயங்கி வருகின்றது இலண்டன் ஈழகேசரி.

'உட்சுவர் தீற்றிப் புறச்சுவர் தீற்று' என்று பழமொழி ஆக்கியவர்கள் தமிழர்கள். உலகத் தமிழர்களின் செய்திகளையும் முன்னேற்றங்களையும் பின்னிடைவுகளையும் எடுத்துப் பேசுவதற்கு தமிழ் நாட்டிலும் தமிழ் நாட்டுக்கு வெளியிலும் பத்திரிகைகள் பல இருக்கின்றன. ஆனால், இலங்கைத் தமிழரின் பிரச்சினைகளையும், இலங்கைக்கு வெளியே வாழ்கின்ற ஈழத்தமிழர்களின் இன்னல் இடுக்கண்களையும் உலகுக்கு எடுத்தோதுவதற்கும் நிவாரணம் தேடுவதற்கும் தமிழ் நாட்டிலும் பத்திரிகைகள் இல்லை; இலங்கையிலும் பத்திரிகைகள் இல்லை. இதையுணர்ந்தும் ஐரோப்பாவில் வெளியாகின்ற ஈழத்தமிழர் பிரசுரிக்கும் பல பத்திரிகைகள் ஈழத்தமிழரின் போராட்டங்கள் பற்றியோ அவர்கள் ஈழத்தில் நடத்தி வரும் சமூக, கலாச்சாரப் புரட்சி பற்றியோ கடல் கடந்து வாழும் தமிழருக்கு எடுத்துக் கூறாமல், ஈழத்தமிழ் உணர்வையும் ஈழத்தமிழபிமானத்தையும் அழித்தொழித்துவிடும் வண்ணம் வேண்டாத செய்திகளை வெளியிட்டு இயங்கி வருவது கவலைக்கிடமான நிலை.

இந்தக் கவலைக்கிடமான நிலையை அடிக்கடி எம் மக்களுக்கு எடுத்துக் கூறி, ஈழத்தமிழ் மண்ணில் இன்று நடைபெற்று வரும் உரிமைப் போராட்டத்தின் ஏற்ற இறக்கங்களையும், அந்தப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு நாம் இங்கே ஆற்றவேண்டிய பணிகளையும் அது தொடர்பில் ஈழத்தமிழரின் கடமைகளையும் மக்களுக்கு உணர்த்துவதை மேலான பத்திரிகா தர்மமாகக் கருதி உழைத்து வரும் ஈழகேசரி, ஈழத்தமிழரின் பத்திரிகை என்று கூறிக்கொள்வதில் பெருமை கொள்ளலாம்.

மற்றவர்களைச் சிரிக்கவைக்க வேண்டுமென்பதற்காகவோ, மற்றவர்களுக்குப் பிடித்தமானவற்றையே எழுத வேண்டுமென்பதற்காகவோ ஈழகேசரி இயங்கவில்லை. ஈழத்தமிழருக்கு நன்மை பயக்கக் கூடியவற்றையே ஈழகேசரி எழுதியும் பிரசுரித்தும் வருகின்றது. ஈழகேசரியின் இந்த நிலைப்பாட்டை உணர்ந்து ஐரோப்பாவில் வாழும் ஈழத்தமிழர் எம்மை நன்றாக ஆதரித்து வருகின்றார்கள். அவர்களுடைய ஆதரவு இருக்கின்றவரைக்கும் ஈழகேசரி பீடு நடைபோடும். ஈழகேசரியின் பீடுநடை ஈழ விடுதலைக்கு விரைவில் வழி வகுக்கும் என்று ஈழகேசரி நம்புகின்றான். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழகேசரிக்கு எங்கள் நல்வாழ்த்துக்கள்



ஒவ்வொரு வியாழனும் இலங்கையிலிருந்து தருவிக்கப்படும் உடனுக்குடனான

* மரக்கறிவகைகள்
* கடலுணவு வகைகள்
* மீன் * நண்டு * இறால்

இலங்கைப் பத்திரிகைகள்
இந்திய வார மாத சஞ்சிகைகள்
இலங்கை பியர், சாராய வகைகள்



**உங்கள் தேவைகள் அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்**

## OFF LICENCE

# CEYLON FOOD CITY

**449 ALEXANDRA AVENUE**
**RAYNERS LANE**
**MIDDLESEX HA2 9SE**
**TEL: 081 723 2211**

RAYNERS LANE STATION க்கு அருகில்
(STATION CAR PARK AVAILABLE)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினகரனில் உனக்கென்று ஒரு வாசகர் கூட்டம்!



*எஸ்.எஸ்.குகநாதன்* **(ஆசிரியர்,'பாரிஸ்' ஈழநாடு)**

தமிழ்ப் பத்திரிகை உலகம் பெருமைப்படக்கூடிய மூத்த தமிழ்ப் பத்திரிகையாளனான உன்னோடு உரிமையோடு நான் பழகினாலும், உன்னையும் ஈழகேசரியையும் வாழ்த்தும் தகுதியை நான் இன்னமும் பெற்றுவிடவில்லை!

ராஜகோபால், பாமா ராஜகோபால், ஷர்மினி, ஈ.கே.ஆர். கோகிலா தங்கத்துரை என்று எத்தனையோ பெயர்களுக்குள் நீ புகுந்து தினகரனில் எழுதிக்கொண்டிருந்தாய்! 'ஈழநாடு'விலிருந்து விலகி தினகரனில் நீ சேர்ந்திருந்த காலம் அது!

பத்திரிகைத் துறையில் எனக்குப் பயிற்சி தந்த ஈழநாடு ஆசிரியர் கோபு (எஸ்.எம்.கோபாலரத்தினம்) சபா அண்ணர் (சசிபாரதி), இப்போது எனது இணை ஆசிரியராக இருக்கும் ஆர்.கந்தசாமி போன்றவர்கள் எனக்கு உன்னை முன்னுதாரணமாக கூறுவார்கள்.

ஈழநாடு சசிபாரதி அப்போது உன்னைப்பற்றி கூறுவது இன்னமும் நினைவில் நிற்கிறது. "தம்பி முந்தி இங்கை வேலை செய்தவன்தான் தினகரன் ராஜகோபால், தினகரனைப் பார்த்தீரா ஒவ்வொரு பக்கமும் வெவ்வேறு பெயர்களில் எப்படிச் செய்கின்றான் பார்" என்று எனக்கு நீ தினகரனில் செய்து வந்த சாகசங்களை தினமும் எடுத்துச் சொல்லுவார். அவையே, உன்னைப் போலவே சில விடயங்களைச் செய்ய என்னையும் தூண்டின.

தினகரனில் புதன் கிழமைகளில் "இதய ராகங்கள்" என்ற பெயரில் நீ தயாரித்த ஒரு பக்கம் இப்பொழுதும் வாசகர்கள் மத்தியில் நினைவில் நிற்கக் கூடியது. பேராசிரியர் கைலாசபதி தினகரனில் ஆசிரியராக இருந்தபோது தினகரன் மூலம் தரமான எழுத்தாளர் கூட்டம் ஒன்றை ஈழத்தில் உருவாக்கினார். அவரால் தினகரன் மூலம் உருவான எழுத்தாளர்கள் இன்று இலக்கிய உலகில் புகழ் பெற்று விளங்குகிறார்கள்.

நீ தினகரனில் பணியாற்றிய காலத்தில், தினகரனுக்கென்று ஒரு வாசகர் கூட்டத்தை உருவாக்கியதை யாவரும் மறுக்க மாட்டார்கள். நீ தினகரனில் இருந்து விடுமுறையில் லண்டனுக்கு வந்துவிட்டு மீண்டும் தாயகம் திரும்பி 'ஈழநாடு' வில் பணியாற்ற வந்தபோது உன்னோடு பணியாற்றியதை நினைக்கின்றபோது அதுவே ஒரு தனி அனுபவமாக இன்றும் நினைவில் நிற்கிறது. உன்னுடைய திறமைகளை நான் எழுதித்தான் யாரும் அறிய வேண்டும் என்பதல்ல.

1985இல் இருவரும் ஒன்றாகவே லண்டன் வந்து எமக்குச் சம்பந்தமில்லாத வெவ்வேறு தொழில்களில் ஈடுபட்டிருந்தபோது, பத்திரிகைதுறையை விட்டு உன்னாலும், என்னாலும் விலகியிருக்க முடியவில்லை! நீ 'தமிழன்' என்று நாமம் சூட்ட, நீயும், நானும், ஸ்கந்தாவும், மாலியும் சேர்ந்து, உன் ஆசிரிய பீடத்தில் 1987இல் முதல் இதழை வெளியிட்டோம். தவிர்க்க முடியாத சூழ்நிலையால் அப்போது அவ்விதழ் அத்தோடு நின்றுவிட்டாலும், பின்னர் நான் பாரிஸ் வந்து ஈழநாடு ஆரம்பிக்க, நீ மீண்டும் தமிழன் ஆரம்பிக்க, பின் கைமாற, 'ஈழகேசரி'யை ஆரம்பித்ததெல்லாம் பழைய கதை.

இன்று ஐரோப்பாவில் பல ஆயிரம் வாசகர்களைக் கொண்டுள்ள ஒரே ஒரு எழுத்தாளனாகவும், பத்திரிகையாளனாகவும் நீ திகழ்கிறாய் என்பதை பல்வேறு ஐரோப்பிய நகரங்களுக்கும் சென்றபோது அறிய முடிந்தது. 'வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்காவரை கப்பலோட்டிய தமிழர்கள்' நூல் மூலம் இந்தச் சாதனையை நிலைநாட்டி விட்டாய்!

இப்போது 'ஆழிக்குமரன்' நூலைப் படைத்திருக்கிறாய்! ஆழிக்குமரன் ஆனந்தனை அறியாதவர்கள் தம்மை ஒரு தமிழர் என்று சொல்லிக்கொள்ள முடியாது. அவர் மரணித்த செய்தி வெளியாகிய மறுவாரம் நீ ஈழநாடு வாரமலரில் ஒரு கட்டுரையை எழுதியிருந்தாய்! அக்கட்டுரையை படித்த ஒவ்வொரு வாசகரும் கண்ணீர் விட்டிருப்பார்கள் என்பது நிச்சயம். அத்தனை உணர்வு பூர்வமாக நீ எழுதியிருந்தாய்! அந்த சாதனை நாயகனில் வரலாற்றை இன்று நூலாக்கியிருப்பது நீ தமிழினத்திற்குச் செய்துள்ள மற்றுமொரு பணி. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சத்தின் நினைவுகளில்
சொந்தங்களின் உறவுகளை
உணர்வுகளோடு
உறவாட வைத்து,
உள்ளத்தில் வாழவைக்கும்
எங்கள் ஈழகேசரிக்கும்,
இனிய நண்பன் ராஜகோபாலுக்கும்
என் இனிய வாழ்த்துக்கள்.




*David V. Palanivel*

**DENTAL SURGEON**

**127, GREENGATE STREET, PLAISTOW, LONDON E13 OBG**

**TEL: 081-472 9429**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எனது சிந்தனையின் சிதறல்கள்...

- எஸ்.ஸ்கந்தா (துணை ஆசிரியர்)

*"தூங்கியது போதுமடா தோழா விழித்துவிடு*
*பொங்கியது பொறுமையெனில் புறப்படு களம்நோக்கி!"*

தமிழீழ தாயக மண்ணில் தன்மான தியாக வேள்வி நடக்கையில் வெளியுலகில் எம்மவர் செய்கைகளும் 'சேவை'களும் எம்மை வெட்கித் தலை குனிய வைக்கின்றன. தினமும் காதில் கேட்கும் செய்கைகள் எம்மைத் திகைக்க வைக்கின்றன. கண்ணில் காணும் காட்சிகள் கண்ணீர்க் காட்சிகளே. என்றும் நன்றிகளே நசுக்கப்படுகின்றன. உண்மைகளோ ஒதுக்கி வைக்கப்படுகின்றன. தந்திரங்களும் சூழ்ச்சிகளும் மேலோங்குகின்றன. போலி முகங்களே கேலி பேசிப் புன்னகை பூக்கின்றன. எம்மவர் சிந்தனைகள் சிதறிப் போனதால், அவர்களுக்கு சிற்றின்பங்களே சொப்பன வாழ்வில் சுகம் தரும் அமுத சுரபிகளாயின.

இத்தனையும் பார்த்த பிறகு எம்மால் எழுதாமல் இருக்க முடியவில்லை.

தடைகள் வரலாம் - எதிர்க்கும் படைகள் வரலாம், இவை இரண்டிற்கும் இடையில் நாம் நின்றாலும், எமது 'ஈழகேசரி'யின் நடை ராஜநடையே!

அண்மைக் காலத்தில் உருவத்தைவிட உள்ளடக் கத்திற்குத்தான் உரிய மதிப்பளிக்க வேண்டும் என்கிற மனோபாவம் மக்கள் மத்தியில் உயர்ந்தோங்கி நிற்கிறது. காலத்தில் மாறுதல்களுக்கேற்ப பத்திரிகைத்துறையில் பல மாற்றங்கள் ஏற்பட்ட போதும் தனக்கென ஒரு தனிப்பாணியை உருவாக்கிய ஆசிரியர் ஈ.கே.ராஜகோபாலின் தனித்துவத்தையும் திறமையையும் ஈழகேசரி இன்று பறை சாற்றுகிறது.

அன்று தன் இளவயதில் யாழ் 'ஈழநாட்டில்' இவர் ஆரம்பித்த பத்திரிகைப் பணி, பின் தினகரனிலும், யாழ் 'ஈழநாட்டிலும்' பரிமாணம் பெற்றது. போலித்தனமான 'ஈழநாடு' லேபல்கள் போடும் 'தமிழன்' அல்ல இவர்.

"திரைகடல் ஓடி திரவியம் தேடிய தமிழன் -
அலை கடல்களையும் தாண்டி
அகதிகளாய் அந்நியநாடுகளில்
அடைக்கலம் தேடிய வேளையில்
புலம்பெயர்ந்த தமிழர்க்கு புத்துணர்வு ஊட்டிட..."

'தமிழன்' பத்திரிகைக்கு ராஜகோபால், நான், 'பாரிஸ்' ஈழநாடு குகன் மற்றும் 'நாழிகை' மாலி ஆகியோர் 1987 இல் வித்திட்டோம். அன்று விதைத்த முதல் விதையினால் விளைந்த 'தமிழன்' பின் மலராகி நறுமணம் வீசி விழைந்த வேளையில் காலத்தின் கொடுமையால், கோரத்தால் 'தமிழன்' இவர் கையிலிருந்து தட்டிப் பறிக்கப்பட்டது.

அடிபட்ட வேங்கையாக சீறிச் சிலிர்த்து சிதைந்து எழுந்தபோது இப்பத்திரிகையாளரின் உணர்வுகள் தணல்களாகத் தகித்தன. தான் கைதூக்கி விட்டவர்களே தன்னைக் கைவிட்டபோதும் தன்னம்பிக்கை ஒன்றை மட்டும் இவர் கைவிடவில்லை. அத் தன்னம்பிக்கையின் மறு உருவமே இன்று எம் கைகளில் தவழும் தரமிக்க ஈழகேசரி.

"அது எந்தக்காலம் என்றால் தான் என்ன - என் சொந்தக்காலில் நிற்பவனல்லவா நான்!"

-இது எமது ஆசிரியர் ஈ.கே.ஆருக்குப் பொருந்தும்.

இன்றைய சமூகத்தில் பலரும் பல்வேறு சிக்கல்களுக்கு உள்ளாக வேண்டிய நிலை; புலம் பெயர்ந்த தமிழர் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்கும் நிலை; தாயகத்தில் தமிழினம் படும் அவல நிலை; அடைக்கலம் புகுந்த இடத்தில் அந்நியரால் சுரண்டப்படும் நிலை; பேணிப் பாதுகாக்கப்பட வேண்டிய எம் தமிழ்க்கலைக்கு ஆபத்து நிலை; இவை அனைத்தையும் எதிர்கொள்ள வேண்டியது உண்மையான ஒவ்வோர் தமிழனின் கடமையாகும்.

ஆக, இதற்கு நாம் என்ன செய்ய முடியும்? இவை யாவற்றையும் கண்டு கலங்குவது ஒரு நிலை, குமுறுவது ஒரு நிலை, குரல் எழுப்புவது இன்னோர் நிலை, இறுதியாக நாமும் அவர்களில் ஒருவராகி அவர்கள் சார்பில் முன்னிற்பது ஒரு நிலை!

- இன்றைய நிலையில் இவை அனைத்தோடும் எம்மை ஐக்கியப்படுத்தி எமது மக்களுக்காக சேவை செய்வதே எமது நோக்கமும் செயற்பாடும் ஆகும். ஏனெனில் இது "உங்கள் பத்திரிகை".

"எமது வெற்றி தொலைவில் இருந்தாலும்..... அதை நாம் தொடும் நேரம் தொலைவில் இல்லை".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஈழகேசரி' விருது பெறும் சிறந்த கலைஞர்கள்

EELAKESARI
ஈழகேசரி
A TAMIL NEWSPAPER FROM LONDON



## சங்கீதம்:

### சரஸ்வதி பாக்கியராஜா


சங்கீதத் துறைக்கான சிறந்த கலைஞருக்குரிய 'ஈழகேசரி' விருது சங்கீத வித்துவான் திருமதி சரஸ்வதி பாக்கியராஜா அவர்கட்கு வழங்கப்படுகிறது.இலங்கை வானொலி, தொலைக் காட்சி, நூற்றுக்கணக்கான மேடைக் கச்சேரிகள் மூலம் பல்லாயிரக்கணக்கான ரசிக இதயங்களைக் கவர்ந்து இசை அரசியாகத் திகழ்ந்தவர். 12 வயதில் சங்கீத அரங்கேற்றம் செய்து, இலங் கையில் பாடசாலைகளில் சங்கீத ஆசிரியையாக 25 ஆண்டுகளும், யாழ்பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகவும் பணி செய்த பெருமைக்குரியவர். இவரிடம் பயின்ற பலர் சங்கீத உலகில் பிரபலமானவர்களாகப் பிரகாசிக்கின்றனர். லண்டனில் ஹவுன்சிலோ தமிழ்ப் பாடசாலை நுண்கலைப் பிரிவுத் தலைவராகவும், விம்பிள்டன் கணபதி ஆலயத்தின் சங்கீத ஆசிரியையாகவும் இப்போது கடமையாற்றுகிறார்.



## நடனம்:

### செல்வலஷ்மி இராமகிருஷ்ணன்.

இலங்கையில் ஏழு அரங்கேற்றங்களையும், லண்டனில் ஆறு அரங்கேற்றங்களையும் செய்த பெருமைக்குரிய நடன ஆசிரியை திருமதி செல்வலஷ்மிக்கு பரதநாட்டியத் துறையில் சிறந்த கலைஞருக்கான ஈழகேசரி விருது வழங்கப்படுகின்றது. பாலசுந்தரி கனகசபை (இப்போது பிரதலிங்கம்)யிடம் பரதம் பயின்று லண்டனில் மற்றொரு பிரபல நடன ஆசிரியை திருமதி. சுபத்திரா சிவதாசனுடன் இணைந்து 1967இல் அரங்கேறினார். பரத நாட்டியத்தில் சர்வதேச மதிப்புப்பெற்ற கலாஷேத்திரத்தில் நாட்டியத்தின் மேல் பயிற்சியைப் பெற்ற இவர் கலாஷேத்திரத்தின் கண்டிப்பையும், காலப்பிரமாணத்தையும் தனது தனித்துவமாக்கிக் கொண்டவர். யாழ். பல்கலைக்கழகத்தின் ஒரு பிரிவான இராமநாதன் அகடமியில் 3 ஆண்டு நடன விரிவுரையாளராக இருந்திருக்கிறார். லண்டனில் 'லக்ஷ்மி ஆர்ட் சென்ரர்' என்ற நாட்டியப்பள்ளி மூலம் நடனப் பணியை பல ஆண்டுகளாக தொடர்ந்து செய்து வரும் இவர், தனது 14ஆவது மாணவியை இவ்வருடம் அரங்கேற்றுகிறார்.



## மிருதங்கம்:

### திருமலை முத்து சிவராஜா

மிருதங்கம் என்றால் முத்து சிவராஜா என்று சொல்லுமளவிற்கு பெயர் பெற்று விட்டவர். லண்டனில் அவர் இல்லாத நிகழ்ச்சிகள் இல்லை. இவரிடம் மாணவர்கள் மிருதங்கம் விரும்பி பயில்கிறார்கள். தமது மாணவர்கள் பலரைத் தொடர்ச்சியாக அரங்கேற்றி வருகிறார். திருகோணமலையில் பதஞ்சலி ஆனந்தபிரசாத்திடம் கெங்கானந்தஜியின் சிவயோகசமஜத்தில் முறைப்படி மிருதங்கம் பயின்றதை மறக்காமல் இப்போதும் நினைவில் வைத்திருக்கிறார். திருமலை பத்மநாதன் இசைக்குழுவில் இவர் இருந்த காலத்தில் ஈழத்தமிழ் சினிமாப் படங்களிலும் இவர் பங்களிப்பு இருந்திருக்கிறது. லண்டனில் மட்டுமல்ல வெளிநாடுகளுக்கும் இப்போது நிகழ்ச்சிகளுக்குச் செல்கிறார். லண்டனில் நோர்வூட் தமிழ்ப் பாடசாலை, ஈஸ்ற்ஹாம் முருகன் கோயில், கற்பேர்ட் தமிழ்ப் பாடசாலை ஆகியவற்றில் மிருதங்க ஆசிரியராகக் கடமையாற்றுகிறார். இத்தகைய சிறப்புகளுக்குரிய முத்து சிவராஜாவிற்கு சிறந்த கலைஞர்களுக்கான ஈழகேசரி விருது வழங்கப்படுகிறது.



## நாடகம்:


### அ.தாசீசியஸ்

நாடகத்துறையில் சிறந்த கலைஞர்களுக்கான ஈழகேசரி விருது தாசீசியஸ் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. இலங்கையில் அவர் மேடையேற்றிய சில நாடகங்களைப்போல எவருமே அப்படியொரு கனதியான 'கரு'வோடு மேடையேற்றம் செய்ய வில்லை. கொழும்பில் மகாகவியின் 'கோடை' என்ற கவிதை நாடகத்தின் வெற்றி தாசீசியஸின் வெற்றி. இந்த நாடகத்தில் தமது பதவியைக் காட்டி, கருத்தை மாற்றப் பார்த்தவர்களுக்கு, மகாகவியின் கருத்தை மாற்ற முடியாதென்று திட்டவட்டமாகக் கூறி 'பொல்லாப்பு'களைத் தேடிக் கொண்டாலும், நாடக மேடையேற்றங்களில், நெறியாள்கையில் கண்டிப்பானவர் என்ற பெயரைப் பெற்றவர். உலக நாடகங்களைப்பற்றி நல்ல தெளிவான அறிவு உள்ளவர் தாசீசியஸ். இவரது 'கந்தன் கருணை' பார்த்திருக்க வேண்டும். கரகம், காவடி என்று பல்வேறு கோலங்கள்!

கொழும்பில் 1980இல் நடந்த தேசிய நாடகவிழாவில் 14 நாடகங்கள் இறுதிப் போட்டிக்கு வந்தன. அதில் தாசீசியஸின் 'பொறுத்தது போதும்' நான்கு பரிசில்களைப் பெற்றன. லண்டனில் அவரது 'மீண்டும் ராமாயணம், மீண்டும் பாரதம்' வசூலில் சாதனை நிகழ்த்தியது. 'ஓடி விளையாடு பாப்பா' 'அபசுரம்' ஆகியன அவரது லண்டனில் குறிப்பிடக்கூடிய மேடையேற்றங்கள். தரமான நடிகர். 'களரி' அமைப்பின் மூலம் அவர் பணி தொடர்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடகம்: க.பாலேந்திரா



பதினைந்து ஆண்டுகளாக தமிழ் அவைக்காற்று கலைக் கழகம் என்ற அமைப்பின் மூலம் நாடகங்களை இன்றுவரை தொடர்ச்சியாக மேடையேற்றி வரும் பணியைச் செய்யும் க.பாலேந்திராவுக்கு சிறந்த நாடகக் கலைஞருக்கான ஈழகேசரி விருது வழங்கப்படுகிறது. "மழை" நாடகத்தை 1978ஆம் ஆண்டு யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் மேடையேற்றினார். நெறியாள்கையுடன் நடிக்கவும் செய்தார். தொடர்ந்து இவரது பல நாடகங்கள் 1982ஆம் ஆண்டுவரை யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும் மேடையேறின. தரமான நாடகங்களை மேடையேற்றக்கூடிய கலைஞர் என்ற நம்பிக்கைக் குரியவராகவும், தனக்கென்று ஒரு நாடக ரசிகர் கூட்டத்தையும் இலங்கையில் ஏற்படுத்திய இவர் மூன்றாண்டு இடைவெளிக்குப் பின் லண்டனில் 1985ஆம் ஆண்டு முதல் இன்றுவரை தொடர்ச்சியாகப் பல நாடகங்களை மேடையேற்றி வருகிறார். 'பார்வையாளர்கள்' என்ற இவரது நாடகம் பாரதிய வித்யபவன் நடத்திய நாடகப் போட்டியில் 4 பரிசில்களைப் பெற்றது. அதற்கடுத்த வருடம் இவரது விடுதலைப் போராட்ட வரலாற்றைக் கூறும் 'எரிகின்ற எங்கள் தேசம்' மூன்று பரிசுகளைப் பெற்றது. சிறுவர்களுக்காக இவர் தயாரித்து, நெறிப்படுத்திய 3 நாடகங்கள் நல்ல வரவேற்பைப் பெற்றது. சுவிஸ் நாடகவிழாவில், இந்திரா பார்த்தசாரதி தனது 'மழை' நாடகத்தை பாலேந்திராவின் மேடையேற்றத்தில் பார்த்து, மனம் திறந்து பாராட்டினார்.

## வீணை:
## அருந்ததி சிறீஸ்கந்தராஜா




வீணையின் இதமான நாதத்தை பிரிட்டனிலும், ஐரோப்பாவிலும் பரப்பும் பெருமைக்குரிய ஈழத் தமிழ்க் கலைஞர் திருமதி அருந்ததி சிறீஸ்கந்தராஜாவுக்கு வீணை இசையில் சிறந்த கலைஞருக்கான ஈழகேசரி விருது வழங்கப்படுகிறது.

இவரது கலைப் பயணம் சாதனைகள் நிறைந்தவை. பதினொரு ஆண்டுகளுக்கு முன், லண்டன் வீணை இசைக்குழுவை ஆரம்பித்த இவர் பிரிட்டனிலும், ஐரோப்பாவிலும் முன்னூறுக்கு மேற்பட்ட வீணை இசை நிகழ்ச்சிகளை நடாத்தியிருக்கிறார். பிபிஸி, ஐரிவி, சனல்-4 டி.வி.களில் இவர் நிகழ்ச்சிகள் ஒளிப்பதிவாயுள்ளன. வானொலியிலும் இவர் மீட்ட இனிய இசை நாதமாக மிதந்தும் உள்ளது. லண்டனில் முதலாவது வீணை இசை ஓடியோ கசற்றை வெளியிட்ட பெருமை இவருக்கே உரியது. சங்கீதத்துடன் கூடிய இந்த வீணை இசை ரசிகர்களின் மிகுந்த அபிமானத்தைப் பெற்றது.

மேற்கத்தைய இசையோடு இணைந்து இவர் நடத்திய வீணை இசை நிகழ்ச்சி பிரிட்டனிலுள்ள கலா ரசிகர்களை வெகுவாகக் கவர்ந்தது. இவருடைய நிகழ்ச்சிகளை தமிழர்கள் மட்டுமல்லாது ஆங்கிலம் மற்றும் பிறமொழி பேசுபவர்களும் விரும்பி ரசிக்கிறார்கள். தமிழரல்லாதவர்களும் இவரிடம் விரும்பி வீணை இசையைப் பயில்கிறார்கள். இசைக்கு மொழியில்லை என்பதனை நிரூபிக்கும் கலைஞராக வாழ்கிறார்

## அழகியற்கலை: க.கிருஷ்ணராஜா



